**சுருக்கம்**

நிலச்சீர்திருத்தம் – 2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டம் – நிலச்சீர்திருத்தத்துறையை கணினிமயமாக்குதல் – ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [நி.சீ.1(2)]த்துறை**

**அரசு ஆணை (1டி) எண். 170** நாள்.07.06.2012

**படிக்கவும்:**

1. முதன்மைச் செயலாளர்/நிலச்சீர்திருத்த ஆணையர், கடித எண்.A2/11542/ 2011(நி.சீ), நாள் 24.12.2011.
2. அரசு கடிதம் எண்.2858/நிதி (வரவு–செலவு–II)/2012–1, நிதி (வரவு–செலவு–II) துறை, நாள் 20.01.2012.
3. அரசு அ.சா.குறிப்பு எண்.43490/வநி3.1/2011–8, வருவாய் (வநி3.1) துறை, நாள் 25.04.2012.

******

**ஆணை:**

2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் நிலச்சீர்திருத்தத் துறையை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) செலவில் கணினிமயமாக்குவதற்கு நிலச்சீர்திருத்த ஆணையர் அனுப்பியுள்ள செயற்குறிப்பிற்கு நிதிநிலைக்குழு ஒப்புதலை அளித்துள்ளது.

2. அதன்படி 2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் நிலச்சீர்திருத்தத் துறையை கணினிமயமாக்குவதற்கு **ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)** ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. நிலச்சீர்திருத்தத் துறையை கணினிமயமாக்குவதற்கு நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஆணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைப்படும் தொகையையே பயன்படுத்திக் கொண்டு மீதித்தொகை அரசு கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

3. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

**"3475–00 ஏனைய பொதுவான பொருளாதார பணிகள் 201–நிலஉச்சவரம்பு (வேளாண்மை நிலம் நீங்கலாக) I திட்டத்தில் சேராதது AD – நிலச்சீர்திருத்த இயக்குநர் தலைமையிடப் பணியாளர்கள் –**
**(i) ரூ.7,20,000/–**
**33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04. ஒப்பந்த ஊதியம்."**
**(த.தொ.கு.3475-00-201-AD-3346)**

//த.பி.பா//

Verified RealEstate ™

(ii) ரூ. 2,80,000/-
76 கணினியும் துணைப் பாகங்களும் 01 வாங்குதல்.
(த.தொ.கு.3475-00-201-AD-7619)

4. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க முதன்மைச் செயலாளர்/நிலச்சீர்திருத்த ஆணையர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை இந்நிதியாண்டிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், இப்பணிகள் முடிவுற்றதற்கான முடிவுற்ற அறிக்கையை (Completion Report) அரசுக்கு அனுப்ப வேண்டும் என முதன்மைச் செயலாளர்/நிலச்சீர்திருத்த இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5.இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.27432/நிதி (வருவாய்)/2012, நாள் 14.5.2012-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ்ராம் மிஸ்ரா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை-600 005.
சம்பளக்கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-600 008.
மாநிலத்தலைமை கணக்காயர், சென்னை-600 018.
மாநிலத்தலைமை கணக்காயர், (தணிக்கை) சென்னை-600 018.
**நகல்**
வருவாய் (வ.நி.3) துறை, சென்னை- 600 009.
நிதி(வருவாய்/வரவு செலவு-II)/பொ.ப)துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வை.க. பன்னீர்செல்வம் 7/6/12

பிரிவு அலுவலர்.

Verified RealEstate ™